

# புத்தனைத் தேடும் போதி மரங்கள்

(துளிப்பா)

**கு. அ. தமிழ்மொழி**

தமிழ்மொழிப் பதிப்பகம்

*01, முருகன் கோயில் தெரு,*

*சண்முகாபுரம், புதுச்சேரி - 605 009.*


*பேசி: 7418477364*

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **புத்தனைத் தேடும் போதிமரங்கள்** |
| நூல் ஆசிரியர் | : | **கு.அ. தமிழ்மொழி** |
| பொருள் | : | துளிப்பா |
| பதிப்பாண்டு | : | 10.10.2017 |
| மொத்த பக்கங்கள் | : | 96 |
| நூல் வடிவமைப்பு | : | கன்னிக்கோவில் இராஜா |
| பின்அட்டை | : | 'ஒளிப்பாவலர்' புதுவை இளவேனில் |
| பதிப்பகம் | : | *தமிழ்மொழிப் பதிப்பகம்*<br>*01, முருகன் கோயில் தெரு,*<br>*சண்முகாபுரம்,*<br>*புதுச்சேரி - 605 009.*<br>*பேசி: 7418477364* |
| அச்சகம் | : | சாய்சிறி அச்சகம் |
| **விலை** | : | **உரூவா.100/-** |



## இரா. இரவி

# அணிந்துரை



ஈழத்தமிழருக்கு அடுத்தபடியாக தமிழ் உணர்வுடனும், தமிழ் இன உணர்வுடனும் வாழும் உணர்வாளர்கள் புதுவைத் தமிழர்கள்.

புதுவையின் பெருமைகளில் ஒன்றானவர் புதுவைத் தமிழ்நெஞ்சன் ஈழத்துக்கவிஞர் காசி ஆனந்தன் போலவே தமிழ் உணர்ச்சிப்பாக்கள் எழுதி வருபவர், அவரது மகள் தான் செல்வி தமிழ்மொழி. புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்ற பழமொழிக்கு ஏற்ப இவரும் தந்தையைப் போலவே துளிப்பாக்கள் எழுதி வருகிறார். அவரது நூலிற்கு அணிந்துரை எழுதிடக் கிடைத்த வாய்ப்பைப் பெருமையாகவே கருதுகிறன். நூல் ஆசிரியர் செல்வி தமிழ்மொழி சிறுவயது முதலே துளிப்பா எழுதி வரும் ஆற்றல் மிக்கவர். குடும்பத்தோடு துளிப்பா எழுதி வருகின்றனர்.

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தால், இதனால் சகலமானவர்களுக்கும் என்று நீட்டி முழக்கி விளக்காமல், சொற் சிக்கனத்துடன் வடிப்பதே துளிப்பா. சுண்டக் காய்ச்சிய பால் போல, வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பது போல, கடுகு சிறிது காரம் பெரிது என்பது போல, தேவையற்ற பகுதிகளை நீக்கிட கிடைக்கும் அழகிய சிலை போல, துளிப்பாவிற்கு உடைய அத்தனை இலக்கணங்களும் பொருந்தும் விதமாக படைத்துள்ள துளிப்பா இலக்கியம் இந்த நூல். நூல் முழுவதும் உள்ள துளிப்பாக்களும் பிடித்து இருந்தாலும், பதச்சோறாக சில மட்டும் உங்கள் பார்வைக்கு தோரண வாயிலாக இங்கே வைக்கின்றேன்.

**குழந்தைகளின் கூட்டம்**
**இருப்பினும் அமைதி**
**மழலைப்பள்ளி!**

*குழந்தைகளைப் பார்த்து ஆசிரியர் 'அமைதி காக்க' என்று சொன்னால் போதும், அனைத்து குழந்தைகளும் அமைதியாகி விடும். குண்டூசி கீழே விழுந்தால் கூட சத்தம் கேட்கும் அளவிற்கு அமைதியாகி விடுவார்கள். இந்த துளிப்பா படிக்கும் அனைவருக்கும் மனக்கண்ணில் பள்ளிக்கூடம் காட்சிக்கு வந்து விடும். இது தான் படைப்பாளியின் வெற்றி.*

**சண்டையிட்ட அப்பா**
**அமைதியானார்**
**மகளதிகாரம்!**

*உண்மை தான். அம்மா சொன்னால் கேட்காதவர், மனைவி சொன்னால் கேட்காதவர், மகள் சொன்னால் கேட்டு விடுவார். இல்லங்களில் நடக்கும் காட்சியை துளிப்பாவாகக் காட்சிப்படுத்தி உள்ளார். அப்பா, அம்மாவுடன் சண்டையிட்டு பேசிக்கொண்டு இருக்கும் போது, அப்பா பேசாம இருங்கப்பா என்று மகள் அதிகாரம் செய்ததும் அன்பிற்குக் கட்டுப்பட்டு அப்பா அமைதியாகி விடுவது இயல்பு.*

**நினைவஞ்சலியில்**
**இறந்து கொண்டிருந்தன**
**மலர்கள்.**

*உண்மை தான், நினைவஞ்சலிக் கூட்டத்தில் மலர்மாலையிட்டு மலர்வளையம் வைத்து வருந்துவது வாடிக்கை, ஆனால் படைப்பாளி இயற்கை நேசர், சுற்றுச்சூழல் ஆர்வலர் என்பதால் மலருக்காக வருந்தும் மனசு உள்ளது, பாராட்டுகள்.*

**புதிய**
**தீண்டாமை**
**நீட் தேர்வு!**

●

**ஒரே தேர்வாம்**
**வேறு வேறு கேள்விகள்**
**நீட்!**

*அனிதாவின் உயிரைப் பறித்த கொடிய நீட் தேர்வின் ஊழலை உணர்த்தும் துளிப்பா நன்று. நீதியரசரே கேள்வி கேட்டார், ஒரே தேர்வு என்றால் வடக்கிற்கும், தெற்கிற்கும் ஒரே கேள்விகள் தான் இருக்க வேண்டும். தெற்கே கடினமாகவும், வடக்கே எளிதாகவும் ஏன் என்று கேட்டு இருந்தார். வெளிநாட்டவர்களும் நீட் எழுதி உள்ளனர். அவர்களுக்கு முன்கூட்டியே இரகசியமாக கேள்விகளும் கிடைத்து விட்டன என்ற தகவலும் இப்போது வந்துள்ளது. சமூக நீதிக்கு வைக்கப்பட்ட அணுகுண்டான நீட் தேர்வை ஒழிக்க வேண்டும். கல்வி என்பது மாநிலத்தின் வசமே இருக்க வேண்டும்.என்ற உணர்வை தந்தது துளிப்பா.*

**மன நோயானது**
**குடி**
**கைகால் நடுக்கம்!**

*இன்றைய இளைய தலைமுறை குடிக்கு அடிமையாகி வருகின்றது. பள்ளி மாணவர்களும், கல்லூரி மாணவர்களும் பிறந்த நாள் கொண்டாட்டம் என்ற பெயரில் முதலில் பீரில் தொடங்கி பின்னர் பிராந்திக்கு அடிமையாகி வருகின்றனர். தடுக்கி விழுந்தால் மதுக்கடை. தேசிய நெடுஞ் சாலைகளில் இருந்த கடைகளை, நீதிமன்ற தீர்ப்பின்படி மூடிய கடைகளை நகரின் உள்ளே திறக்கும் ஆர்வத்தை விட்டு விட்டு மூடி இருக்கும் அரசுப்பள்ளிகளைத் திறக்க அரசு முன்வர வேண்டும். ஒரே ஒரு துளிப்பா, பல சிந்தனைககளை விதைக்கின்றன, பாராட்டுக்கள்.*

**தோட்டம் அழித்து**
**கட்டிய வீட்டில்**
**குளிர் அறை!**

*நல்ல காற்றை நல்கும் மரங்களை வெட்டி, தோட்டங்களை அழித்து வீடுகளைக் கட்டி வருகின்றோம். குளிர்சாதனப்பெட்டி மூலம் வருகின்ற குளிர் நல்லதல்ல என்று மருத்துவர்கள் கூறி வருகின்றனர். குளிர்சாதன*

*மகிழுந்துகள் திடீரென தீப்பிடித்து உயிர் இழப்புகளும் நடந்து வருகின்றன. இயற்கையை நேசிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை விதைக்கும் துளிப்பா நன்று!*

**உதிர்ந்த இலை**
**தாங்கிப் பிடித்தது**
**குளத்தில் கல்!**

*துளிப்பா என்றால் இயற்கையை மட்டும் தான் பாட வேண்டும் சிலர் கொடி பிடித்து வருகின்றனர். துளிப்பா என்றால் இயற்கையையும் பாடலாம், எதனையும் பாடலாம் என்பதை மெய்ப்பிக்கும் நூல் இது. இயற்கையைப் பாடுவதில் சப்பானியத் துளிப்பா கவிஞர்களுக்கு சற்றும் சளைத்தவர்கள் அல்ல நமது தமிழ்த் துளிப்பா கவிஞர்கள். இயற்கையை மிக அழகாகக் காட்சிப்படுத்தி வெற்றி பெற்றுள்ளார் நூல் ஆசிரியர் செல்வி தமிழ்மொழி.*

*துளிப்பா நூற்றாண்டு நிறைவு விழாவில் இந்நூல் வெளியிடுவது மிகப் பொருத்தம். நூலாசிரியர் செல்வி தமிழ்மொழிக்கும், அவரது குடும்பத்தாருக்கும் எனது அன்பான நல்வாழ்த்துக்கள். தொடர்ந்து சிந்தியுங்கள், தொடர்ந்து எழுதுங்கள்.*

*நன்றி*

*அன்புடன்*

**- இரா.இரவி**



## மு. சிவலிங்கம்

# அணிந்துரை



**த**மிழ் மொழி ஒரு இலக்கிய வீட்டில் செழித்து வளரும் செடி..! இவரது "சிறகின் கீழ் வானம்" துளிப்பா தொகுப்புக்கும் அணிந்துரை எழுதியுள்ளேன். இரண்டாவது வாய்ப்பும் கிடைத்துள்ளது..! இறுமாப்படைகின்றேன்.

தமிழ் மொழியின் பாக்களில் சமூக அக்கறை.. வாழ்க்கைப் பார்வை.. அரசியல் பிரக்ஞை.. இவைகள் இழையோடுவது பெரும் சிறப்பாகும்.

இவையே இவரது படைப்பின் உச்ச நிலையாகும். சில வரிகளில் "வீச்சு" இருப்பதை காணுகின்றோம்.

என்னளவில் ரொம்பவும் பிடித்த அந்த "வீச்சு" 'அப்பா' கவிதையில் இருக்கிறது. இது யதார்த்த உணர்வின் வெளிப்பாடாகும்.

**சண்டையிட்ட அப்பா**
**அமைதியானார்**
**மகளதிகாரம்..!**

சில அப்பாக்கள் குடித்து விட்டு வந்து வீட்டில் அட்டகாசம் செய்வார்கள். சில அப்பாக்கள் குடிக்காமலே அதிகாரம் செய்துக் கொண்டிருப்பார்கள். மனைவி, மக்களை கொத்தடிமைகளாக அடக்கி ஆண்டுக் கொண்டிருப்பார்கள். தான் மட்டும் உழைக்கின்றேன்.. என்ற மமதை, செருக்கு இவை நிறைந்த கோவத்தில் "பாஸ்" ஆக நடந்துக் கொள்வார். இவை யாவற்றையும் மகன்மார்கள் எதிர்க்க வரும் போது, யுத்தம் முளைக்கும்..! மகள்

*எடுத்துக் காட்டுவதற்கு நிமிரும் போது, அவ்வகை அப்பாக்கள் மௌனமாகி விடுவதை அறிய முடிகிறது. மனைவியிடம் தனது ஏகாதிபத்தியத்தை, சர்வாதிகாரத்தைத் திணிப்பதற்கு முன் வரும் போது, பக்குவமடைந்து விட்ட ஒரு மகளின் கண்டனக் குரல் எழும் போது, அவர்கள் பெட்டிப் பாம்பாகி விடும் யதார்த்தத்தையும் அறிய முடிகிறது. மகள் அதிகாரம் தலையெடுக்காத வீடுகளிலெல்லாம் அப்பன்மார்களின் முடியாட்சியை அழிக்கவே முடியாது.! அம்மாவும் பிள்ளைகளும் அப்பாவி குடிமக்கள்தான்! இந்த குடும்ப யதார்த்த நிலையை மூன்று வரிகளுக்குள் விளக்கியிருக்கும் தமிழ் மொழியின் தலையை அன்பாகத் தடவி விடலாம். இந்து சமுத்திரத்துக்கு அப்பால் இருப்பதால், அது முடியாத காரியமாகி விட்டது!*

*இவ்வாறே வாசகன் என்ற ரசனையில் சில அரசியல் பிரக்ஞை நிறைந்த வரிகளைப் பார்ப்போம்.*

**உரிமைதான்**
**இருந்தும் பயனில்லை**
**வாக்கு**

●

**ஒரே தேர்வாம்**
**வேறு வேறு கேள்விகள்**
**நீட்..!**

●

**புதிய**
**தீண்டாமை**
**நீட் தேர்வு..!**

●

**தூக்குக் கயிற்றில்**
**அனிதாக்கள்**
**கொலையாளி..?**

*இக்கவிதையை நான் விமர்சிக்க விரும்புகின்றேன். அனிதாவுக்கு வக்காளத்து வாங்க முடியவில்லை..! ஏழை குழந்தைதான்.. இரக்கப்படவும் முடிய வில்லை. இவள் அநீதியைக் கண்டு மிரள வேண்டியதில்லை.. பிரச்சினையைக் கண்டு உயிரை மாய்க்க வேண்டியதில்லை. இவள் வயதையொத்த மாணவி மலாலாவை நினைத்திருக்க வேண்டும். தலிபான்களின் துவக்கு பட்டும் எகிறி நின்றாள்.! இலட்சியம் வென்றது.! உலக சமாதான விருது கூட வீடு தேடி வந்தது. தற்கொலை செய்வது.. உண்ணாவிரதமிருந்து உயிரை மாய்ப்பது எல்லாம் இன்றைய மனிதம் இல்லாத காலத்துக்குப் பொருந்தாது! அட்டூழியங்களை வென்றெடுப்பதே*

*அறிவாகும்.. அதுவே விஞ்ஞானமுமாகும். அதற்கு உயிர் வேண்டும். மனம் உடைந்து மரணித்த அனிதா சாவில் என்ன நடந்தது..? மேடை கிடைக்காத அரசியல் வாய்களுக்கெல்லாம் அவளால் அவல் கிடைத்தது..! அவர்களிடம் அனுதாப கீதம் வாங்கினாள். ஒரு வகை "கதாநாயகத் தனத்தை" அவள் பெற வேண்டிய துர்ப்பாக்கியமே கிடைத்தது... ஆகவே, நீட் அநியாயமென்றாலும், அனிதா பற்றிய கவிதைகளில் வியப்பொன்றுமில்லை.!இது தமிழ்மொழியின் கவிதைக்கு அப்பாலான பொது விமரிசனமே.!*

*குடி பழக்கத்திற்கான கவிதையில்*

**மன நோயானது**
**குடி**
**கை, கால் நடுக்கம்..!**

*இக் கவிதை சமூகப் பிரஜையிடம் விரல் நீட்டுகின்றது.. குடிக்கிறவன் நாசமாகிப் போகிறான்.. அவனது குடும்பமும் நாசமாகிப் போகிறது.. அவனுக்காக தமிழ் மொழி கவலைப் பட வில்லை. குடியின் தீமையை மட்டும் சொல்லி வைப்பதே போதுமானதென எண்ணுகிறார். புரிகின்றவர் புரிந்துக் கொள்ளட்டும்! குடிக்கின்றவன் நேரங் காலத்தோடு போய் சேரட்டும்..!*

**குடி, குடியைக் கெடுக்கும்**
**அரசு விளம்பரத்தோடு**
**மதுக் கடைகள்..!**

●

**பணத்தை எண்ணுகையில்**
**மக்களின் ஓலம்**
**மதுக் கடை வருமானம்..!**

*இவ்விரு கவிதைகள் பற்றி.. எனது பார்வை.. அறிவுள்ளவன் குடிப்பதில்லை.. அறிவில்லாதவன் குடிக்கிறான்.. இரண்டாமவனுக்காக அரசு தரும் விளம்பரத்தையும், சாராயக் கடைக்காரன் எண்ணும் பணத்தைப் பற்றியும் தனிக் குரல் கொடுப்பதில் பயனில்லை.. இதை படைப்பாளி ஏற்றுக் கொள்வார் என நம்புகின்றேன்.. நியாயங்கள் எப்படி*

*இருந்தாலும், பெண்ணாய் பிறந்த ஒரு கவிதாயினிக்கு கேடுகளைக் காணும்போதெல்லாம் நெஞ்சில் நெருப்பு எரியத்தான் செய்யும்.. அந்த நெருப்பு, தமிழ் மொழியின் நெஞ்சிலும் நீறு பூத்திருப்பதை அறிகிறேன். காரணம்..நாளைய சமுதாயத்தில் இவள் ஒரு தாய்..!*

**தண்ணீர்க் குழாய்**
**வழிந்த நீர் கேட்கிறது**
**ஊர்ப்பேச்சு.**

*இக்காலத்தில் குழாய் நீர் எவ்வளவு பெறுமதியானது..? நீர் கிடைக்காத காலத்தை.. நீர் பிரச்சினையை,காவிரி அரசியலை.. வாழ்விழந்த நிலத்தை.. கொஞ்சம் கூட அறியாத அறிவிலிகள் ஊர் வம்பு அளந்துக் கொண்டிருக்க. வீணே வடிந்தோடும் நீர்.. ஊர் பேச்சை கேட்டுக் கொண்டிருந்தது.. இது அற்புதமான கவிதை.. அற்புதமான கற்பனை.! அற்புதமான யதார்த்தம்..!அடிப்படை அறிவை மக்கள் எப்போது பெறுவர்?*

*தமிழ் மொழியின் சமுதாயம் பற்றிய வருத்தத்தையும் நாம் உணர வேண்டியவர்களாக இருக்கின்றோம். இயற்கை மேல் கொண்டுள்ள சீற்றம், ஆட்சி மீதான சாடல், இவைகளுக்கிடையிலும், வாழ்வியலில் உணரும் வியப்புக்கள், வாழ்க்கை ரசனைகள், பாசம், சுயநல ஆசைகள்.. அபூவமாக சில்லிடும் இளமையின் கீறல்..! எல்லாமே இத் தொகுப்பில் அற்புதம்.. அழகு...!*

*தமிழ் மொழி, பாரதி வாழ்ந்து திரிந்த மண்ணைச் சேர்ந்தவர்.. புதுமைப் பெண்ணாக மாற வேண்டியவர்.. ஆகவே மக்களின் எதிரியைச் சாடும் முன் மக்களைச் சாடுங்கள்..! பாரதியைப் போல மக்களைத் திட்டித் தீர்த்தக் கவிஞன் உலகில் எவனுமே இல்லை.! பாரதி தேடியப் பெண்ணாக உங்களை அடுத்த தொகுப்பில் காண்பதற்கு ஆசைப்படுகின்றேன்.*

*வாழ்த்துக்கள்!.*

*அன்புடன்*

**மு.சிவலிங்கம்**

*மலையகம், இலங்கை*



# கன்னிக்கோவில் இராஜா

மகிழ்வுரை



## மௌனப் புன்னகையை எதிரொலிக்கும் புத்தர் சிலை!

**மு**ன்னெப்பொழுதைவிடவும் மிகச்சிறப்பாய் இயங்குகிறது இப்புவி. கால ஓட்டத்தில் களவாடப்பட்டுவரும் காடுகளுக்கு மத்தியில், நகர இடம்பெயர்தலில் வாழக் கற்றுக்கொண்டன புள்ளினங்கள்.

எப்போதும் ஏதோ ஒரு செய்தியைச் சொல்லிச் செல்லும் தும்பிகளை, அண்ணார்ந்து பார்த்தபடி நகர்கின்றன நத்தைகள்.

தாத்தாச் செடியில் தலைதூக்கிக் பார்த்த ஓணான்களை இந்நாளில் நான் கண்டதேயில்லை. தவளை, கீரி, பூரான், மினுக்கட்டான்பூச்சி இன்ன பிறவும் அழிவின் விளம்பில் இருந்தாலும், வாழ்ந்து கொண்டே இருக்கின்றன கவிதை உலகில்.

கவிதைகள் காலத்தின் கண்ணாடி. மனித மனங்களின் ஒட்டுமொத்த ரசனையையும் சிறு சிறு புள்ளிகளாக்கித் தந்து ஒளிர்பவை. கவிதைக் குழந்தைகளின் மிகக் குறும்பாக ரசனையை அள்ளித் தருபவை ஹைக்கூ.

நான் வளர்ந்து பணி செல்லும் காலத்தில் என்னுள் அறிமுகமான ஹைக்கூ, கு.அ.தமிழ்மொழி பள்ளி செல்லும் காலத்திலேயே அறிமுகமானதில் ஆச்சரியமொன்றுமில்லை.

*புதுச்சேரி, துளிப்பாவின் முதல் வித்து. **16.10.1916**ல் பாரதி புதுச்சேரியில் வசித்த காலத்தில் தமிழுக்கு கட்டுரை வாயிலாக ஹைக்கூவை 'ஹொக்கு' என அறிமுகப்படுத்தினார் என்பது அனைவரும் அறிந்ததே.*

*ஹைக்கூவின் வரலாறு, செவிவழி; வாய்வழி; எழுத்துவழி என எவ்வழியில் வந்தாலும், அதன் வரலாறு மாறப்போவதில்லைதான்... ஆனால் பலரின் ஆசைக்கும் ஆர்வத்திற்கும் இணங்க மாற்றங்களை அடைகிறது என்பதும் மறுப்பதிற்கில்லை. ஆகையால் இப்போது கூறப்படும் பல வரலாறுகள் திருத்தப்பட்டவையாகவும், திரிக்கப்பட்டவையாகவும் இருப்பது வேதனைதான். களை களையப்பட்டாலே உண்மை வரலாறு வெளிவரும்.*

*தான்ஏழாம்வகுப்புபடிக்கும்காலத்தில்'சிறகின்கீழ்வானம்' என்கிற ஹைக்கூ தொகுப்பு மூலம் தனது விசாலப் பார்வையை நமக்கு அறிமுகப்படுத்திய கு.அ.தமிழ்மொழி, இன்று 'புத்தனைத் தேடும் போதிமரங்கள்' தொகுப்புமூலம் பலபுதி கருப்பொருள்களை சுமந்து வருகிறார்.*

*முந்தைய தலைமுறை கனவுகளோடும், இன்றைய தலைமுறை நினைவுகளோடும் இணைந்து புத்தம் புதிய தலைமுறைக்கு வழிகாட்டும், வழிகாட்டியாய் வலம் வருகிறார் என்பதற்கான சான்றுக் கவிதைகள் தொகுப்பில் நிறைந்திருக்கின்றன. நிறைவாய் இருக்கின்றன.*

*மொழி, அரசியல், பால்யம், சினம், போராட்டம், கனவு, களவு எனப் பல்பொருள் சிறப்பங்காடியாய் தன் பார்வையின் ஒற்றைச் சுழற்றியை ஒவ்வொரு பக்கத்திலும் பதிய விட்டிருக்கிறார்.*

**கடலில் எண்ணெய்**
**வாளியில் அள்ளியது**
**வல்லரசு இந்தியா**

●

**அசைபோட முடியவில்லை**
**உழவு மாடுகள்**
**நியூட்ரினோ**

*என்கிற கவிதைகளில் இன்றைய அவசியமும், அவசரமும், அரசியலையும் ஒருசேர புலப்படுத்துவதோடு அதற்கான தீர்வை அடுத்தடுத்த கவிதை வழி தெளிவு படுத்துகிறார்.*

**தற்கொலைக்கு**
**வழியில்லை**
**வறண்ட ஆறுகள்**

*பல இதழ்களிலும், தொகுப்பு நூல்களிலும், இணையத்திலும் ஏற்கனவே அறிமுகமான கவிதைகளோடு, இன்றைய நடைமுறை சிக்கலையும் தன் ஒவ்வொரு கவிதையிலும் பிரதிபலிக்கிறார்.*

*வரலாற்றினை கட்டுரை வடிவங்களாக பதிவிடுவது ஒருமுறை என்றாலும், தான் கண்ட கேட்ட அனுபவ கூறுகளை வரலாறாக பதிவிட்டிருப்பது சிறப்பு.*

*தொடர் இயக்கமாக குடும்பத்தினரோடு இணைந்து ஹைக்கூ படைத்துவரும் இளந்தோழி கு.அ.தமிழ்மொழியை வாழ்த்தி வரவேற்கிறேன்.*

*மகிழ்ச்சி.*

நேயத்துடன்

**கன்னிக்கோவில் இராஜா**
*ஆசிரியர் - மின்மினி ஹைக்கூ இதழ்*



## 12 ஆம் அகவையில் 'சிறகின் கீழ் வானம்'
## 12 ஆண்டுகளுக்குப் பின்
## 'புத்தனைத் தேடும் போதிமரங்கள்'

*அந்தி வானம் சிவந்திருக்கும். வெண் கொக்குகள் சிறகடித்துக் கூடு திரும்பும். மழைக் கால சூழல் போல கார் முகில்கள் திரண்டிருக்கும். திசையெட்டும் மின்னல் கொடி படர்ந்து மறைந்தோடும். இடி இடித்து பெருங்காற்று முகில் கலைக்கும். சில்லென்ற குளிர் தென்றல் முகம் துடைக்கும். மனதுக்குள் மழை வந்து சிலுசிலுக்கும்.*

*இயற்கை எழில் கொஞ்சுகின்ற வயல்வெளிகள் இருந்திட்ட புதுச்சேரியில் அயலினத்தார் குடியேற்றம் மிகுந்ததினால் மருத நிலம் மருதம் நகர் ஆயிற்று. காடு மேடெல்லாம் தொழிலகம் ஆயிற்று.*

*இயற்கையைப் பாடுவதே துளிப்பா என்கின்றனர். இயற்கையே இல்லாதபோது செயற்கையாய்ப் பாடுவது மடமையல்லவா ? எந்த இலக்கியமும் வாழ்வியலுக்கானது தான். துளிப்பா மட்டும் விதிவிலக்கல்ல. உயிர்களைப் பாடுவதே உண்மையான பாக்கள். தேன் பூக்கள்.*

*என் 12 ஆம் அகவையில் கதிர்காமம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 2005ஆம் ஆண்டு மக்கள் முதல்வர் ந. அரங்கசாமி ஐயா*

“சிறகின் கீழ் வானம்” என்ற துளிப்பா நூலை வெளியிட்டு ‘நீ மட்டும் எழுதினால் போதுமா இனி ஒவ்வொரு நாளும் பேரவையில் துளிப்பா அனைவருக்கும் சொல்’ என்றார் அதன்படி 2005 முதல் 2007 வரை மூன்றாண்டு 1400 மாணவியர்களுக்கு திருக்குறளுக்குப் பின் துளிப்பா சொல்லி வந்தேன் “சிறகின் கீழ் வானம்” நூலுக்காக தேசியக் குழந்தை விருது தில்லியில் பெற்றேன். மேலும் கவிஞாயிறு தாராபாரதி சிறப்புப் பரிசு பெற்றது.

12 ஆண்டுகள் கடந்து விட்ட இந்தச் சூழலில் “புத்தனைத் தேடும் போதிமரங்கள்” நூலை துளிப்பா நூற்றாண்டில் வெளியிடுவதை மகிழ்வாகக் கருதுகிறேன். “வாழ் நாளில் ஒரு சிறந்த துளிப்பா எழுதினாலும் போதும் என்றார்” பாசோ. நான் 12 ஆண்டுகளுக்குப் பின் துளிப்பா நூலைக் கொண்டு வருகிறேன்.

மாணவர் பொதுநலத் தொண்டியக்கம் நடத்திய திங்கள் துளிப்பா அரங்கில் துளிப்பா படித்த ஞானசேகரன், பரிதியன்பன், இராணி அம்மாள், மாறி, புதுவை இளங்குயில், ஓவியம் தமிழ்ச்செல்வி, தவப்பிரியா, விசயலட்சுமி, பத்மபாரதி ஆகியோர் நூல் வெளியிட்டுள்ளனர். 14.12.2007 இல் “மூவடி” என்கிற துளிப்பா இதழைத் தொடங்கி நடத்தி வருகிறேன். இந்த மூவடி, மின்மினி, துளிப்பா நாளிதழ் மூன்றும் சேர்ந்து 16.10.2016 இல் துளிப்பா நூற்றாண்டு விழாவை சிறப்பாக நடத்தினோம்.

04.09.2017 அன்று முத்தரையர்பாளையம் இளங்கோ அடிகள் அரசு மேனிலைப் பள்ளியும், மாணவர் பொதுநலத் தொண்டியக்கமும் சேர்ந்து நடத்திய துளிப்பா நூற்றாண்டுப் பயிலரங்கில் பள்ளி முதல்வர் தனசெல்வன் நேரு ஐயாவிடம் பேரவையில் துளிப்பா நூற்றாண்டை முன்னிட்டு நாளும் ஒரு துளிப்பா சொல்லக் கோரிக்கை வைத்தோம். 05.09.2017 இல் இருந்து துளிப்பா சொல்லி வருகின்றனர்.இதற்கு ஆசிரியர் பெ.பூபதியும், ஓவியர் அன்பழகனும் துணை நின்றனர்.

என் வளர்ச்சிக்குத் துணை நிற்கும் தூய நல்நெஞ்சங்களுக்கு என் அறிவன்பு கலந்த வணக்கம். அணிந்துரை நல்கிய ஐயா சிவலிங்கனார், இரா.இரவி, கன்னிக்கோவில் இராசா ஆகியோர்க்கு என் நன்றிகள்.

அன்புடன்

கு.அ.தமிழ்மொழி


# புத்தனைத் தேடும் போதிமரங்கள்





வீடு திரும்பி இருக்குமா
துணைக்கு வந்த பட்டாம்பூச்சி
திடீர் மழை

●



பணத்தை எண்ணுகையில்
மக்களின் ஓலம்
மதுக்கடை வருமானம்
●

புதிய
தீண்டாமை
நீட் தேர்வு
●

பழைய புகைப்படம்
கரையானின் கரிசனம்
விட்டு வைத்தது என் முகத்தை
●



படித்து விட்டேன் தான்
திருப்பிக் கொடுக்க மனமில்லை
நூலகப் புத்தகம்

●



குழந்தைகள் கூட்டம்
இருப்பினும் அமைதி
மழலைப் பள்ளி

●

உரிமை தான்
இருந்தும் பயனில்லை
வாக்கு

●

தண்ணீர்க் குழாய்
வழிந்த நீர் கேட்கிறது
ஊர்ப் பேச்சு

●



அருகில் அவள்
மங்கலாய்த் தெரிந்தாள்
மார்கழி

●



எரியும் சிதை
அடங்கிப் போனது
ஆசைகள்

●

ஒரே தேர்வாம்
வேறு வேறு கேள்விகள்
நீட்

●

குருதிக்கறை
ஐயனார் முகத்தில்
பலியிடப்பட்ட ஆடு

●



**தூ**க்குக் கயிற்றில்
அனிதா
கொலையாளிகள்?
●



மழைத்துளி
ஒளித்து வைத்தது
மரத்தின் வியர்வை

●

உலர்த்திய ஆடை
ஓய்வில்
மழைக்குப் பிந்தைய வானம்

●

அமைதிப் புறா
குண்டடிபட்டு சிவப்பானது
ஈழப் படுகொலை

●



திசை எட்டையும்
நட்பாய் ஆக்கிக் கொள்ளும்
கிளைகள்

●



அம்மாவை
"மம்மி" ஆக்கியது
ஆங்கிலம்
●


கடலில் எண்ணெய்
வாளியில் அள்ளியது
வல்லரசு இந்தியா
●

வாங்கினேன்
படிக்கவில்லை
படித்து விட்டது கறையான்
●



நிலாக் குளத்திலிருந்து
துள்ளிக் குதித்து விட்டது
விண்மீன்கள்

●



மழை இரவு
ஓயாத சில்வண்டுகள்
மின் தடை

●

இழைந்தது மூங்கில்
காட்டுத் தீ
புல்லாங்குழல் உடன்கட்டை

●


வருமானமல்ல
அவமானம்
மதுக்கடைகள்

●



முப்பால்
தாய்ப்பால்
தமிழ்ப்பால்

●



கதைக்கேட்டு
தூங்கினான் தம்பி
"உம்" கொட்டும் நிலா

●

சிட்டுக்குருவி
வீட்டுக்குள் கூடு கட்டியது
கைவிசிறி

●

தமிழக வரலாற்றை
மாற்றுகிறது தில்லி
ஆதிச்சநல்லூர், கீழடி

●



தமிழீழக் குருதியில்
தாகம் தணிக்கிறான்
சிங்கள புத்தன்

●



வளர்ச்சி பெயரில்
பன்னாட்டுக் கொள்ளை
துறைமுக விரிவாக்கம்

●

நிலவை எழுப்பாமல்
நீர் குடிப்பதெப்படி?
கரையில் நான்

●

மின்மினி வெளிச்சத்தில்
தொலைந்துபோனது
மறைமதி இருட்டு



உடல் சிலிர்க்கும்
பறவைகள்
மழைக் குளியல்
●



குடிசையின் ஓட்டையை
மூடி மறைத்தது
பூசணிக்கொடி
●

திருடப்பட்டது
பசுவின் பால்
வைக்கோல் கன்று
●

கரந்தடியாய்
பாலைவன வேட்டை
பதுங்கும் பாம்பு
●



யாருமற்ற இரவில்
தனியே விழித்திருந்தது
நிலா

●



நீர்ப்பாதை காட்டும்
துள்ளும் மீன்கள்
படகின் துடுப்பு
●

விழுதை
ஊஞ்சலாக்கியது
காற்றுக் குழந்தை
●

பட்டினி வயிறு
நிறைந்திருக்கும் மனம்
குடிசை வாழ்க்கை
●



**வ**ளர்மதியை
முழுமதியாக்கியது
குண்டர் சட்டம்
●



மழைக்காலம்
வீடெங்கும் ஈரம்
குருவிக்கூடு
●

பூச்சாண்டிக்காரனை
ஏமாற்றிக் கொண்டிருக்கிறாள்
சோறூட்டும் தாய்
●

சாலையில்
விரைவு ஊர்தி
திக்.. திக்.. மனம்
●



நிரப்பியது
தூக்கம் தொலைத்த இரவை
துளிப்பா
●



திருமணம்
களைகட்டியது
ஒளிப்படம்

●

வெட்டியான்
வேலை இழந்துபோனான்
மின்சுடுகாடு.

●

வெயில் தாங்காமல்
உருவுக்குள் மறைந்துகொண்டது
நண்பகல் நிழல்

●



திருடு போனது
உண்டியல்
கற்சிலை கடவுள்

●



விதையுறக்கம்
கலைந்து எழும்
தமிழீழம்
●

"யாதும் ஊரே
யாவரும் கேளிர்"
முள்ளிவாய்க்கால்
●

தாலாட்டு மறந்து
தூங்குகிறது மழலை
"கான்வென்ட்"
●



290 குழந்தைகள்
உயிர்வளியின்றி சாவு
“பாரத் மாதாக்கீ சே”
●



களவாடியது
சுருக்குப் பையையும்
கள்ளப்பணம்

●

ஆய்தபூசை படையலில்
வைக்கப் பட்டிருந்தது
அறிவியல் புத்தகம்

●

தமிழில் ஆய்தம்
தமிழே ஆய்தம்
தூங்கும் தமிழினம்

●



களவு போனது
கோயில் உண்டியல்
காக்கும் கடவுள்

●



**தொ**டர் வண்டியில்
புத்தகம் பிரித்தேன்
மூடச் சொல்லியது வயல்வெளி

●

**வெ**ல்வது உறுதி
பணம் பதவி
மற்றும் கள்ள ஓட்டு

●

**கொ**லை
தற்கொலை அல்ல
உழவர்கள் சாவு

●



பதியவில்லை
மூளையில்
அயல்மொழிக்கல்வி

●



அசைபோட முடியவில்லை
உழவு மாடுகள்
நியூட்ரினோ
●

கோயில் குளத்தில்
பொரியள்ளி வீசினேன்
குவியும் மீன்கள்
●

தற்கொலைக்கு
வழியில்லை
வறண்ட ஆறுகள்
●



தோட்டம் அழித்து
கட்டிய வீட்டில்
குளிர் அறை
●



சல்லிக்கட்டில்
அடங்கியது தில்லி
திமிறின தமிழ்க் காளைகள்

●

உழவர் தற்கொலை
பண்ணாட்டுத் தொழிலகம்
பசுமை வறட்சி


●

அடகுக் கடைகளில்
தமிழச்சிகளின் தாலி
“மார்வாடி

●



மஞ்சள் முகங்கள்
மாறிப்போனது
சிவப்பழகு?
●



வானிலை அறிவிப்பு
பெய்து கொண்டிருக்கிறது மழை
நனைவோம் குடையிருந்தும்
●

உழவு மாடுகள்
விளை நிலங்கள்
விற்பனைக்கு
●

இந்தியாவில்
தமிழ்நாடு
அனிதா கொலை
●



உண்டியல் இல்லா
கோயில் இல்லை
காசேதான் கடவுளடா
●



மழை இன்பம்
நனையும் போதே தெரியும்
பள்ளிப்பருவம்

●

வயிறு அடுப்பு
அவியவே இல்லை
பசித்தீ

●

கருப்பு வெள்ளை ஓவியம்
வண்ணமானது
பட்டாம் பூச்சி

●



வரிசையில்
அணிவகுத்து எறும்புகள்
நியாய விலைக்கடை

●



ஏந்தத் கொடியும்
நமக்கானதல்ல
அம்மணமாய் நாம்
●

மாடியில் நிலாச்சோறு
தீர்ந்து போனதென்னவோ
இரவு மட்டும்
●

உதிர்ந்த இலை
தாங்கிப் பிடித்தது
குளத்தில் கல்
●



வித்திட்டது
அரச மரம்
புத்தனின் சிந்தனை
●



மீந்த உணவு
வாயில் கவ்விச் சென்ற நாய்
பசியில் குட்டிகள்

●

பேருந்து திடீர் நிறுத்தம்
மோதிக் கொண்டேன்
அப்பாவின் கையில்

●

குடைக்குள்ளே நான்
இருந்தாலும் சில்லிட்டது
எதிரே அவன்

●



விரட்டி விட்டாலும் தொடர்ந்து வருகிறது
ஒரு முறை போட்ட
உணவிற்காய் நாய்

●



காய்ந்த மரம்
சருகின் சத்தம்
கீழே கடைசிக் குருவியின் சிறகு
●

மனை நோயானது
குடி
கை கால் நடுக்கம்
●

மழலைக் கதையை
இரசித்துக் கேட்கிறது
தலையாட்டி பொம்மை
●



அம்மா மறைத்து வைத்த
இனிப்புப் பெட்டி
வழிகாட்டும் எறும்புகள்

●



**இ**வன் பெயர் சூட்ட
பெயரில்லாமல் நாய்கள்
உயிர்களை நேசிப்பவன்

●

**தே**சியப் பறவை தான்
இருந்தாலும் பிடுங்குவோம்
இந்தியா

●

**வா**சலில் காத்துக் கிடக்குமோ
பூனை
ஊரிலில்லை நாங்கள்

●



புகையுடன்
வெளியேறிக் கொண்டிருந்தது
உயிர் மூச்சு
●



புது சாலை வேண்டாம்
அடுத்த நாள்
பள்ளம் தோண்டும் பணி
●

நானும் பொய் சொல்கிறேன்
குழந்தையிடம்
இன்று மழை வரும்
●

நூல் வெளியீட்டு விழா
சிதறிக் கொண்டிருந்தது
புகழ்ச்சி
●



தீக்குச்சியில்
குளிர் காய்ந்தது
நெருப்பு



சண்டையிட்ட அப்பா
அமைதியானார்
மகளதிகாரம்

●

பேரிரைச்சலுடன்
கோவத்தைத் தணிக்கிறது
வீழும் அருவி

●

நினைவஞ்சலியில்
இறந்து கொண்டிருந்தன
மலர்கள்

●



பாம்பின் வழித்தடம்
அடையாளம் காட்டியது
மணல் பாதை

●



வேலையில்லை
வயற்காட்டு பொம்மைக்கு
நிலத்தில் வீடுகள்
●

திறக்கப்பட்டன
மூடிய மதுக்கடைகள்
சாலை பெயர் மாற்றம்
●

காவி வண்ணத்தில்
அப்துல் கலாம் அருங்காட்சியகம்
பகவத் கீதை
●



பட்டினியாய்க் கிடக்கையில்
உணவளிக்காதவன் சொல்கிறான்
மாட்டுக்கறி தடை

●



உழவனின்
கோவணத்தை உருவியது
புதிய இந்தியா
●


பசிக்குரலைக் கேட்காமல்
பாலில் குளிக்கும் பகவன்
ஆறறிவு?
●

கூடு திரும்புகையில்
புயல் அறிவிப்பு
சிறகு முளைக்கா குஞ்சுகள்
●



புத்தனைத் தேடும்
போதிமரங்கள்
எண்திசையிலும் போர்க்குரல்

●




**கோ**புர நிழலாய்
கருவறை இருட்டு
திருடுபோனார் கடவுள்
●

**இ**ரவு கண் மூடிடாது
விளையாடும் விண்மீன்கள்
துணையாய் நிலா
●

**கா**லில்லா பசுங்கொடி
விரைந்தெங்கும் போகிறது
பச்சைப்பாம்பு




ஆறு செல்வம் விழாவில் அரிமதி தென்னகன் ஐயா, அரிமதி இளம்பரிதி, ஆறு செல்வம், புதுவைத் தமிழ்நெஞ்சன், செந்தூரிகை அவர்களுடன் கு.அ.தமிழ் மொழி



பாவலர் அறிவுமதி மகள் திருமண நிகழ்வில் நாட்டுப்புறப் பாடகி சின்னப் பொண்ணு அவர்களுடன்



ம. இலெ. தங்கப்பா ஐயா அவர்களுக்கு
பிறந்தநாள் வாழ்த்து சொல்லிய போது



பாவலர் உதயசூரியன் அவர்களுடன்



எழுத்தாளர் பிரபஞ்சன், செல்வகுமாரி, உடன் புதுவைத் தமிழ்நெஞ்சன், கு.அ.தமிழ் மொழி




துளிப்பா நூற்றாண்டு வைர விழா நிகழ்வில் மித்ரா, அமுத பாரதி, எ.மு.இராசன், புதுவைக் குமாரி, கு.அ. அறிவாளன், புதுவைத் தமிழ்நெஞ்சன், கு.அ.தமிழ்மொழி




பாவலர்கண்மணி குணசேகரன் அவர்களுடன் கு.அ. தமிழ் மொழி




தாத்தாவின் அறக்கட்டளை சொற்பொழிவு நிகழ்வில் வழக்கறிஞர் அருள்மொழி அவர்களுடன் கு.அ. தமிழ் மொழி மற்றும் குடும்பத்தினர்




தாத்தாவின் அறக்கட்டளை சொற்பொழிவு நிகழ்வில் வழக்கறிஞர் அருள்மொழி அவர்களுடன் கு.அ. தமிழ் மொழி மற்றும் குடும்பத்தினர்




செம்படுகை நன்னீரகம் நடத்திய எங்களையும் வாழ விடுங்கள் நிகழ்வில்



ஆறு செல்வம் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தல்




திருவள்ளுவர் பிறந்த நாள் 2048 தமிழ்ச்செல்வன்,
அன்பரசன், அரசேந்திரன்



பாவாணன், பைரவி, கு.அ. தமிழ் மொழி



ஆறு செல்வன், வேல் முருகன், சீனு வேணுகோபால், அமைச்சர் கந்தசாமி, பாவாணன்




இளம் படைப்பாளிக்கானப் பயிற்சிப் பட்டறையில்
பிரபஞ்சன், பாண்டியன், சீனு.தமிழ்மணி



சென்னையில் ஒரு நிகழ்வில் பழனி தட்சிணாமூர்த்தி ஐயா வரைந்த ஓவியங்களுடன் பாவலர்கள் செ.சு. மலரடியான், கன்னிக்கோவில் இராஜா, அரசெழிலன், கவிதைத்தம்பி மற்றும் பழனி தட்சிணாமூர்த்தி ஐயா



தமிழுலகன், சுப.தமிழ்ச்செல்வன் அவர்களின் அண்ணன்



காசி ஆனந்தன் ஐயா அவர்களுடன்




மித்ரா, தமிழரசி, நெடுஞ்செழியன், செஞ்சி தமிழினியன், பல்லவி குமார், உதயக்கண்ணன், இளங்குயில், பவுன்குமார், உரு.அசோகன், அன்பழகன், கன்னிக்கோவில் இராசா, இளங்குமரன், தமிழ்ச்செல்வன், எ.மு.இராசன், அமுதபாரதி, அறிவாளன், ஓவியம் தமிழ்ச்செல்வி, செந்தூரிகை




பாவலர்கள்: செம்போடை வெ.குணசேகரன்
மயிலை சந்திரா இணையருடன்




பக்தவச்சல பாரதி, சீனு.தமிழ்மணி, பைரவி, அறிவுமதி, இல்லோடு சிவா



சோ.கு.செந்தில்குமரன், பேராசிரியர் கிருட்டினக்குமார்
நல்லாசிரியர் விருது பெற்றதற்காகாகப் பாராட்டு



வே.ஆனைமுத்து ஐயா அவர்களுடன்




அன்பழகன், ஓவியம் தமிழ்ச்செல்வி, ஆனைமுத்து ஐயா,
கோதண்டராமன், அரசேந்திரன், தமிழ்ச்செல்வன், சாந்தன்




கீழுர் நினைவிடம்




பாவலர் வையவனின் சதுரங்கக் காய்கள் நூல் வெளியீட்டு விழாவில் அன்பழகன், செந்தில் பாலா, அரிமாப் பாண்டியன், இளமுருகன், நா.இளங்கோ




மூவடி துளிப்பா இதழ் நடத்திய
'துளிப்பா நேற்று இன்று நாளை' நிகழ்ச்சி




விடுதலை வீரர் சீனுவாசன் தனலட்சுமி அறக்கட்டளை சார்பாக
மேட்டுப்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பில்
முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்குதல்




பச்சியப்பன், இரவிக்குமார் உடன்




வாணிதாசன் மகள் ஐயை, சொர்ண பாரதி, புதுவை பிரபா, தமிழமல்லன், தமிழ்மணவாளன், பரிதியன்பன், முத்து ஆகியோர்களுடன்





சிப்மர் இதய நோய் மருத்துவர் சாய் சந்திரன், பைரவி




ஔவை நிர்மலா, கிருட்டிணமூர்த்தி உடன்



ஆகாசம் பட்டு சோசசலம், சுப்ரபாரதிமணியன், போப்பு




தோழர் நல்லக்கண்ணு, பைரவி




புதுவை நட்புக் குயில்கள் செஞ்சி களத்து மேடு நடத்திய நிகழ்வு



நெல் காப்பாளர் செயராமன்



இரவிக்குமார், ஈரோடு தமிழன்பன் ஐயாவுடன்



சுற்றுச்சூழல் போராளி நக்கீரன் உடன்



இலக்கியன், நெல்லை சு.முத்து ஐயா அவர்களுடன்



பாவலர் பட்டி செங்குட்டுவன், பேராசிரியர் பழமலை, பழனிவேலு




நச்சுப் புகையில்லாப் போகி நிகழ்வில் உரையாற்றிய போது



வீர வணக்க நிகழ்வில் காசி ஆனந்தன், இளைய குமரன்



பச்சியப்பன், யுகபாரதி, இரவிக்குமார்




புதுச்சேரி தனித்தமிழ்க் கழகம் நடத்திய தனித் தமிழ் இயக்க நூற்றாண்டு விழாவில் வேல்முருகன், பராங்குசம், தமிழ்மணி, தமிழ்ச்செல்வன்




சுப.உதயக்குமார் உடன்



ஒளிப்படக் கலைஞர் புதுவை இளவேனில், அவர் மகன் அதியன்



கவிஞர் இளம்பிறை அவர்களுடன்



மக்கள் தொலைக்காட்சி பொறுப்பாளர் சௌமியா அன்புமணி,
மக்கள் பாவலர் செயபாசுகரன் உடன்